**நகராட்சி அலுவலகம்,**
**சாத்தூர்.**
**நாள்: 23.10.2020**

**<u>சாத்தூர் நகர்மன்ற சாதாரணக் கூட்டம்</u>**

**நிகழும் மங்களகரமான ஆண்டு சார்வரி வருடம் ஐப்பசி மாதம் 7 ஆம் நாள் 2020ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரணக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பொருட்கள் விவரம் பின்வருமாறு.**

**முன்னிலை : திரு.என்.ராஜமாணிக்கம், எம்.ஏ.,**
**தனி அலுவலர்,**
**சாத்தூர் நகராட்சி.**

<u>பொருள் எண்: 1</u>

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட தலைமை நீரேற்று நிலையத்தில் உள்பகுதியில் களிமண் தரை மழைகாலங்களில் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் குடிநீர் விநியோக பணி மேற்கொள்ளும் பணியாளர்கள் பணி மேற்கொள்ள மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். தற்போது புதிய பாதாளச் சாக்கடை திட்டப்பணிக்கு நகர்பகுதியில் சாலையினை தோண்டும் போது அப்புறப்படுத்தப்பட்டு பழைய பேவர் பிளாக் கல்லினை கொண்டு தலைமை நீரேற்ற பகுதியினை சீரமைக்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.2,50,000/—க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண்.349/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 673, நாள்: 23.10.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்: 2</u>

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட கழிவுநீர் உந்து நிலையத்தில் உள்ள 5 எச்.பி மோட்டார் பழுது ஏற்பட்டு இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே அதனை பழுது பார்க்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.15,000/—க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண்.337/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 674, நாள்: 23.10.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்: 3

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட பைபாஸ் மேல் நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் மெயின் ரோட்டில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் உள்பகுதியில் களிமண் தரை மழைகாலங்களில் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் குடிநீர் விநியோக பணி மேற்கொள்ளும் பணியாளர்கள் பணி மேற்கொள்ள மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். தற்போது புதிய பாதாளச் சாக்கடை திட்டப்பணிக்கு நகர்பகுதியில் சாலையினை தோண்டும் போது அப்புறப்படுத்தப்பட்டு பழைய பேவர் பிளாக் கல்லினை கொண்டு தலைமை நீரேற்ற பகுதியினை சீரமைக்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.3,00,000/—க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 359/2020/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 675, நாள்: 23.10.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்: 4

சாத்தூர் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படும் குடிநீரில் லிக்யூடு குளோரினேசன் கலப்பதற்கு இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளது. அதில் தற்போது பழுது ஏற்பட்டுள்ளதால் சீரான முறையில் குளோரினேசன் கலக்க இயலவில்லை. எனவே அதனை பழுது பார்க்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.30,000/—க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண்.338/2020/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 676, நாள்: 23.10.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்: 5

சாத்தூர் நகராட்சி இருக்கண்குடி தலைமை நீரேற்று நிலையத்திற்கு மின்இணைப்பு வழங்கும் டிரான்சபாமரிலிருந்து பெறப்படும் மின்சாரம் பம்ப் அறைக்கு வரும் ஒல்டேஸ் அடிக்கடி குறைவாக வருவதால் சீரான முறையில் மின்சாரம் கிடைப்பதற்கு தேவையான மின்இணைப்பு உபகரணங்களை வாங்கி பயன்படுத்துவதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.10,000/—க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண்.336/2020/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 677, நாள்: 23.10.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்: 6

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.22—ல் பங்களா தெருவில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் சுற்றுச்சுவரில் கதவு இல்லாததால் வெளி நபர்கள் உள்ளே சென்று வருகிறார்கள். எனவே பாதுகாப்பு கருதி கதவு அமைத்து, அதே போல் ஆணையர் குடியிருப்பிலும் சுற்றுச்சுவரில் கதவு இல்லாததால் மேற்கண்ட இரண்டு இடங்களிலும் கதவு அமைக்கும் பொருட்டு அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.40,000/—க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 362/2020/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 678, நாள்: 23.10.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்: 7

அரசு செயலாளர் (தலைமைச் செயலகம்), நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி மற்றும் மாவட்ட ஆட்சியர் விருதுநகர் அவர்களால் திட்டப்பணிகள், கொரோனா சம்பந்தமான ஆய்வுக்கூட்டம் மற்றும் தேர்தல் ஆணையத்தால் நடத்தப்படும் ஆய்வுக்கூட்டங்கள் தற்போது பெரும்பாலும் காணொளி காட்சி வாயிலாக அடிக்கடி நடத்தப்படுவதால் அதில் கலந்து கொள்ளும் பொருட்டு அதற்கு தேவையான 2 கணினி மேசைகள் மற்றும் 2 சேர்கள் விருதுநகர் மாவட்ட சர்வோதய சங்கம் சாத்தூார் கிளையில் வாங்கவும், அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.10,000/—க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 372/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 679, நாள்: 23.10.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்: 8

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.12635/2020/UPA-3-1, நாள்: 28.08.2020ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ள அறிவுரையின்படி, வறுமைக்கோட்டு பட்டியல் மீள ஆய்வு செய்து சரியான விபரங்கள் கணக்கெடுப்பு படிவத்தினை கணினி பதிவேற்றம் செய்ய உத்தேச செலவுத் தொகை ரூ.50,000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.91/2019/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 680, நாள்: 23.10.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்: 9

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள வாகனம் எண்.TN67Z 4628 வாகனத்திற்கு தகுதிச்சான்று முடிவு பெற்றுள்ளதால் தகுதிச் சான்றினை புதுப்பிக்க ஆகும் செலவுத் தொகை ரூ.56,500/—க்கும் மற்றும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.361/2020/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 681, நாள்: 23.10.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்: 10

நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள 3பெரிய டேங்கர் லாரி TN 67 a 7796 வண்டிக்கு தகுதிச் சான்று 25.08.2020—உடன் முடிவு பெறுவதால் தகுதிச் சான்று புதுப்பிக்கும் பொருட்டு வண்டியில் உள்ள பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மதுரை டிவிஎஸ் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேசச் செலவுத் தொகை ரூ.1,00,000/—க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>பழுது விபரம்</u>**

1. வாகனம் வாட்டர் சர்வீஸ், இன்ஜின் ஆயில் சர்வீஸ், டீசல் பில்டர், கியர் ஆயில், கோரன் ஆயில் புதியது மாற்ற வேண்டும்.
2. செல்ப் மோட்டார், டயனமோ மோட்டார், வைப்பர் மோட்டார் செக்கப் செய்து வேலை பார்க்க வேண்டும்.
3. வண்டியின் Side Safety Bracket ஆங்கிள்
4. பட்டக்கட்டு புஸ், பிரேக் லைனிங் செக்கப் செய்து வேலை பார்க்க வேண்டும்.
5. 1 ¾ ஏஸ் 100 அடி, 1.5 எம்.எப் வயர் 100 அடி புதியது மாற்ற வேண்டும்.
6. கிளட்ச் பிளேட், சென்டர் ஜாயிண்ட், எண்ட் செக்கப் செய்ய வேண்டும்.
7. ரேடியேட்டர் செக்கப் செய்ய வேண்டும்.
8. தண்ணீர் டாங்க் உள்பகுதி மற்றும் வண்டியின் உள் மற்றும் வெளி வேலை பார்க்க வேண்டும்.
9. பெயிண்டிங் தகுதி சான்று வாசகங்கள் எழுத வேண்டும்.
10. வேக கட்டுப்பாடு கருவி மாட்டவும், R.T.O சான்றுக்குரிய ஸ்டிக்கர்கள் புதியது ஒட்டவும் வேண்டும்.

(ந.க.எண். 375/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 682, நாள்: 23.10.2020.**
**தீர்மானம் : <u>அனுமதிக்கப்படுகிறது</u>**

<u>பொருள் எண்: 11</u>

நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள தெருவிளக்கு பராமரிப்பு வாகனம் TN 67 AC 5394 வண்டிக்கு தகுதிச் சான்று 03.11.2020–உடன் முடிவு பெறுவதால் தகுதிச் சான்று புதுப்பிக்கும் பொருட்டு வண்டியில் உள்ள பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேசச் செலவுத் தொகை ரூ.42,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>பழுது விபரம்</u>**

1. இன்ஜின் ஆயில் சர்வீஸ், 4வீல் கீரீஸ் டேக்கிங் செய்ய வேண்டும்.
2. புதிய பேட்டரி 1 Nos புதியது மாற்ற வேண்டும்
3. ராம் சில் கிட் புதியது மாற்ற வேண்டும்
4. ஸ்பீடு கண்ரோல் மீட்டர் மாட்ட வேண்டும்.
5. L.H டோர் கிளாஸ் மெஷீன் புதிய மாற்ற வேண்டும்.
6. முன்பகுதியில் உள்ள கண்ணாடி புதியது மாற்ற வேண்டும்.
7. பெயிண்டிங் செய்து அரசு பிறப்பித்த வாசகங்கள் மற்றும் ஸ்டிக்கர்கள் ஒட்ட வேண்டும்.

(ந.க.எண். 397/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 683, நாள்: 23.10.2020.**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்: 12

சாத்தூர் நகராட்சி அம்மா உணவகத்தில் உள்ள மாவு அரைக்கும் கிரைண்டர் பழுது பார்க்கும் பணி செய்ய **26.06.2020–ல்** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. கெங்கா எலக்ட்ரிக்ல்ஸ் சாத்தூர் – ரூ. 5,200/–
2. சுபா செல்வி எல்க்ட்ரிக்ல்ஸ் சாத்தூர் – ரூ. 5,300/–

வரப்பெற்ற ஒப்புந்தப்புள்ளிகளில் கெங்கா எல்க்ட்ரிக்ல்ஸ் சாத்தூர் நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 204/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 684, நாள்: 23.10.2020.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்: 13

சாத்தூர் நகராட்சி அம்மா உணவகத்தில் உள்ள இரண்டு எண்ணம் மின்விசிறிகள் மற்றும் சின்டெக்ஸ் டாங்குகள் பழுதாகி குழாய்கள் உடைப்பு ஏற்பட்டு பாயிலர்கள் பழுது அடைந்துள்ளது. அதனை பழுது பார்க்கும் பணி செய்ய **26.06.2020–ல்** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. கெங்கா எலக்ட்ரிக்ல்ஸ் சாத்தூர் – ரூ. 10,334/–
2. சிவா எல்க்ட்ரிக்ல்ஸ் சாத்தூர் – ரூ. 10,977/–

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கெங்கா எல்க்ட்ரிக்ல்ஸ் சாத்தூர் நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 204/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 685, நாள்: 23.10.2020.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது**

பொருள் எண்: 14

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN.67AJ 6058 வாகனத்திற்கு தகுதிச்சான்று புதுப்பிக்க வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய **10.09.2020ம்** தேதியன்று

ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | செலவு தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | சித்திக் சர்வீஸ் லூப்ரிகேசன் & ஆட்டோ மொபைல் ஒர்க்ஸ், கோவில்பட்டி. | **44,900/–** |
| 2 | N.A.ரகமத்துல்லா ஆட்டோ மொபைல் ஒர்க்ஸ், கோவில்பட்டி. | **41,850/–** |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்புந்தப்புள்ளிகளும் வைப்புத் தொகை செலுத்தியுள்ளார்கள். வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.N.A.ரகமத்துல்லா ஆட்டோ மொபைல் ஒர்க்ஸ், கோவில்பட்டி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.339/2020/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 686, நாள்: 23.10.2020.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்: 15</u>

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN.67Z 4628 வாகனத்திற்கு தகுதிச்சான்று புதுப்பிக்க வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய **11.09.2020**ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | செலவு தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | சித்திக் சர்வீஸ் லூப்ரிகேசன் & ஆட்டோ மொபைல் ஒர்க்ஸ், கோவில்பட்டி. | **59,000/–** |
| 2 | N.A.ரகமத்துல்லா ஆட்டோ மொபைல் ஒர்க்ஸ், கோவில்பட்டி. | **55,600/–** |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்புந்தப்புள்ளிகளும் வைப்புத் தொகை செலுத்தியுள்ளார்கள். வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.N.A.ரகமத்துல்லா ஆட்டோ மொபைல் ஒர்க்ஸ், கோவில்பட்டி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.361/2020/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 687, நாள்: 23.10.2020.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது**

பொருள் எண்: 16

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள டிராக்டர் மற்றும் டிரைலர் வாகனம் எண்.TN67A 6631 மற்றும் 6630 வாகனத்திற்கு தகுதிச்சான்று முடிவு பெற்றுள்ளதால் தகுதிச் சான்றினை புதுப்பிக்க ஆகும் செலவுத் தொகை ரூ.72,500/–க்கும் மற்றும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.401/2020/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 688, நாள்: 23.10.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்: 17

சாத்தூர் நகராட்சியில் பணிபுரியும் அனைத்துப் பிரிவுகளில் உள்ள குழாய் பொருத்துநர், கிளீனர், வாகன கிளீனர், வால்வு ஆப்பரேட்டர், காவலர்கள், ஓட்டுநர்கள், மகப்பேறு உதவியாளர்கள், மகப்பேறு ஆயாக்கள், அலுவலக உதவியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் அனைவருக்கும் 2020–2021ம் ஆண்டுக்கான சீருடைகள், காலணிகள் மற்றும் தையல் கூலிகள் வழங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.4.00/–லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

2020–2021ம் ஆண்டிற்கான சீருடைகள் மற்றும் காலணிகளை அரசு அங்கீகாரம் பெற்ற கோ–ஆப்டெக்ஸ் மற்றும் காதிகிராப்ட் நிறுவனங்கள் கூட்டுறவு நிறுவனங்களில் வாங்கிக் கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண். /2020/எச்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 689, நாள்: 23.10.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்: 18

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ந.க.எண்.1588/2015/ஜே1, 15.06.2015ம் தேதிய நேர்முகக் கடிதத்தில் 10.06.2015ல் நடைபெற்ற பருவமழை முன்னேற்பாடு, கொசு மூலம் பரவும் நோய்கள் மற்றும் தொற்று நோய் தடுப்புப்பணிகள் சம்மந்தமான ஆய்வுக்கூட்ட நடவடிக்கை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களுக்கு அனுப்பப்பட்ட வாட்ஸ் அப் செய்தியிலும், அரசாணை (நிலை) எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3) துறை நாள்:30.04.1997ல் அளவுகோலின்படி (Norms) தேவைப்படும் துப்புரவு பணியாளர்களை (Outsourcing) தினக்கூலி அடிப்படையில் அனுமதி பெற்று நியமித்துக் கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சாத்தூர் நகராட்சியில் 2011ம் வருடத்திய கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 29390 மற்றும் குடியிருப்புகளின் எண்ணிக்கை 8104 உள்ளது. இந்நகராட்சியில் பேருந்து நிலையம், தினசரி காய்கறி

மார்க்கெட் மற்றும் குடியிருப்புகளில் இருந்து தினசரி 13 மெட்ரிக்டன் திடக்கழிவுகள் உண்டாகிறது. மேலும் நகராட்சி சாலைகள் 37கி.மீ., மாநில நெடுஞ்சாலை 2.11கி.மீ., தேசிய நெடுஞ்சாலை 2கி.மீ. மற்றும் நகராட்சி கழிவுநீர், மழைநீர் வடிகால் 30.5கி.மீ. நீளம் உள்ளது. இவை தவிர மழைநீர் செல்லும் ஓடைகள் தேசிய மற்றும் மாநில மழைநீர் செல்லும் வடிகால்கள் உள்ளது. நகராட்சிக்கு உரக்கிடங்கு ஒன்றும் உள்ளது. மேற்கண்டவற்றில் ஏற்படும் பணிகளை தற்போதுள்ள நகராட்சி துப்புரவு பணியாளர்களால் செய்ய இயலாத நிலை உள்ளது. இதனால் பொது சுகாதாரப்பணிகள் மற்றும் டெங்கு தடுப்பு பணிகளில் சுணக்கம் ஏற்படுகிறது.

இந்நகராட்சியில் 1970ம் வருடத்தில் 81 துப்புரவு பணியாளர்களின் பணியிடங்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது. 45 வருடங்களாக கூடுதல் துப்புரவு பணியாளர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படவில்லை. மக்கள் தொகை பெருக்கம் மற்றும் பொதுமக்களின் அன்றாட தேவைகளின் காரணமாக திடக்கழிவுகளின் அளவு பெருகியுள்ளது. இந்நகரில் 13 மெட்ரிக்டன் திடக்கழிவுகள் உண்டாகிறது. எனவே அவற்றிற்கேற்றாற்போல் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

அரசாணை (நிலை) எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3) துறை நாள்:30.04.1997–ல் அரசு நிர்ணயித்துள்ள (Norms) அளவுகோலின்படி கீழ்க்கண்டவாறு இந்நகராட்சிக்கு தற்போது 117 துப்புரவு பணியாளர்கள் தேவைப்படுகிறது

**அரசாணை (நிலை) எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3) துறை நாள்: 30.04.1997–ன்படி சாத்தூர் நகராட்சி பொது சுகாதாரப்பணி – துப்புரவு பணியாளர் பணியிடங்கள் தோற்றுவித்தல் – அளவுகோல் – திருத்தியமைத்தல் – விபரம்**

| வ.எண் | வேலை வகைப்பாடு | தேவையான துப்புரவுப் பணியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 250 – குடியிருப்புக்கள் அல்லது 3 கி.மீ. சாலைக்கு 3 பேர் கொண்ட குழு (2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 8104 குடியிருப்புகள்) | |
| | 8104 / 250 x 3 நபர்கள் | 97 |
| 2 | பெரிய லாரி – 1 | 4 |
| 3 | சிறிய லாரி – 2 | 6 |
| 4 | டிராக்டர் வாகனம் – 1 | 3 |
| 5 | உரக்கிடங்கு பராமரிப்பு | 2 |
| 6 | பேருந்து நிலையம் கட்டண கழிப்பிடம் பராமரிப்பு | 1 |
| 7 | பேருந்து நிலைய கழிவறை பராமரிப்பு | 2 |

| | | |
|---|---|---|
| 8 | பேருந்து நிலைய பராமரிப்பு C பிரிவு | 2 |
| | மொத்தம் | 117 |

அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர் பணியிடங்கள் – 81

காலிப்பணியிடங்கள் – 48

---------

தற்போது உள்ள துப்புரவு பணியாளர்கள் – 33

---------

(Norms) அளவுகோல் படி நகராட்சிக்கு தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் எண்ணிக்கை. – 117

தற்போது உள்ள பணியாளர்கள் – 33

காலி பணியிடம் – 7

01.02.2018 முதல் துப்புரவுப் பணியாளர்கள் தனியார் மூலம் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் – 36

01.07.2019 முதல் துப்புரவுப் பணியாளர்கள் தனியார் மூலம் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் – 41

---------

தற்போது மொத்த துப்புரவு பணியாளர்கள் – 117

---------

அரசாணை (நிலை) எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3) துறை நாள்:30.04.1997ல் குறிப்பிட்டுள்ளவாறு அளவுகோலின்படி (Norms) நகராட்சிக்கு தேவைப்படும் 117 துப்புரவு பணியாளர்களில் தற்போது பணிபுரியும் 33 பணியாளர்கள் தவிர்த்து மீதமுள்ள 84 துப்புரவு பணியாளர்களின் பணியிடங்களுக்கு (Outsourcing) தினக்கூலி அடிப்படையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.36909/பி3/2015, நாள்: 18.12.2015ம் தேதிய செயல்முறை ஆணையின்படி 36 துப்புரவு பணியாளர்களுக்கு அனுமதி பெற்று தனியார் மூலம் 01.02.2018 முதல் 28.02.2021 உடன் மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி அடிப்படையில் 36 தினக்கூலி பணியாளர்கள் மூன்றாண்டுகள் பணி நிறைவடைகிறது. அதனை மீண்டும் புதுப்பித்துக் கொள்வதற்கும், மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.28369/2018/ஜே3, நாள்: 04.12.2018ன்படி 41 துப்புரவு பணியாளர் பணியிடங்களுக்கு அனுமதி பெற்று, 01.07.2019 முதல் 30.08.2020 வரை ஓராண்டு பணி நிறைவு பெற்றவுடன் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், பொது சுகாதாரப்பணிகள் பாதிக்காத வண்ணம் இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.1582/2015/எச்1, நாள்: 25.06.2020ல் இரண்டாம் ஆண்டுக்கு முதலாம் ஆண்டிற்கு எடுக்கப்பட்ட மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தில், தற்போது

கொரோனா வைரஸ் கோவிட்–19 நடைமுறையில் இருந்து வருவதை கருத்தில் கொண்டு தொடர்ந்து துப்புரவு பணிகளை மேற்கொள்ள, பார்வை 6ல் கண்ட மெஸர்ஸ் ரெலையான் பெசிலிட்டி சர்வீஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை ஒப்பந்ததாரர் அவர்களின் கடிதத்தில் கேட்டுக்கொண்டபடி ஒரு நாளைக்கு ஒருநபருக்கு பழைய விலை விகிதம் ரூ.307/–க்கு மீண்டும் பார்வை 7ல் கண்ட இவ்வலுவலக செயல்முறை ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ள 51 நிபந்தனைகளுக்குட்பட்டு மெஸர்ஸ் ரெலையான் பெசிலிட்டி சர்வீஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தின் மூலம் 01.07.2020 முதல் ஏற்கனவே செய்து வரும் பணியினை தொடர்ந்து தனியார் மூலம் துப்புரவு பணி மேற்கொண்டுவர அனுமதி அளித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்நகராட்சி பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி அளவுகோலின்படி (Norms) தேவைப்படும் 117 துப்புரவு பணியாளர்களில் தற்போது நிரந்தர துப்புரவு பணியாளர்கள், தனியார் மூலம் 01.02.2018 முதல் மொத்தம் 117 துப்புரவு பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். ஆகவே தற்போது 33 நிரந்தர பணியாளர்கள், மூன்றாண்டுகள் தனியார் மூலம் 28.02.2021ல் முடிவடையும் 36 துப்புரவு பணியிடங்களுக்கும் 01.07.2019 முதல் பணிபுரிந்து வரும் 41 துப்புரவு பணியிடங்களுக்கும், தற்போது நகராட்சியில் பணிபுரிந்து ஒய்வுபெற்றும், பணியிடை காலமாக காலமான காலிப்பணியிடங்கள்–7 ஆக மொத்தம் சேர்த்து 84 துப்புரவு பணியிடங்களை (Outsourcing) தினக்கூலி அடிப்படையில் 84 துப்புரவு பணியாளர்களை நியமிக்க அதற்கான அனுமதி வேண்டி சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கவும், சம்பள செலவினத் தொகையை வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து ஈடு செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.1582/2015/எச்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 690, நாள்: 23.10.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்: 19</u>

அரசாணை எண்.298, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 02.09.2020ம் தேதிய அரசாணையில் கொரோனா தொற்று தடுப்பு பணி காரணமாக பிறப்பிக்கப்பட்ட பொது ஊரடங்கு காலத்தில் 01.04.2020 முதல் 31.05.2020 வரை உள்ள காலத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படாத கடைகள்/வரியில்லா இனங்ளுக்கு வாடகைத் தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்களித்து உத்திரவு வரப்பெற்ற அரசாணை எண் நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 1064/2017/சி2)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 691, நாள்: 23.10.2020.**
**தீர்மானம் : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது**

<u>பொருள் எண்: 20</u>

சாத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள ஜெட்ராய்டு வாகனம் டி.என்.67 பி.இ 5382 வண்டிக்கு தகுதிச் சான்று பெறும் பொருட்டு பழுது பார்க்கும் பணி செய்ய 09.10.2020–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. குரு மோட்டார்ஸ் டீசல் ஒர்க்ஸ் சாத்தூர் – ரூ. 45,000/–
2. ஸ்ரீகலைமகள் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் சாத்தூர் – ரூ. 40,900/–

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஸ்ரீகலைமகள் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் சாத்தூர் நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 329/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 692, நாள்: 23.10.2020.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்: 21</u>

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட பைபாஸ் நான்கு வழிச்சாலையில் கிழக்கு பக்கம் உள்ள சர்வீஸ் ரோட்டில் மழைக் காலங்களில் மழைநீர் தேங்கியும், வாகனங்கள் செல்லுவதற்கு சிரமம் ஏற்படுவதுடன் பொதுமக்களுக்கு சுகாதார கேடும் ஏற்பட்டு வருகிறது. எனவே சர்வீஸ் ரோட்டில் அமைந்துள்ள மழைநீர் வடிகாலில் ஏற்பட்டுள்ள அடைப்பு மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
(ந.க.எண். 420/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 693, நாள்: 23.10.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்: 22</u>

சாத்தூர் நகராட்சி அண்ணா பேருந்து நிலையத்திற்கு வட்டார போக்குவரத்து அலுவலரிடம் தகுதிச்சான்று பெறும் பொருட்டு பேருந்து நிலையத்தில் சுகாதார பணி, குடிநீர் பணி, மின்விளக்குகள், இருக்கை வசதிகள் மற்றும் பேருந்துகள் வந்து செல்லுவது குறித்த விளம்பரப் பலகை மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.1,50,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
(ந.க.எண். 303/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 694, நாள்: 23.10.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்: 23</u>

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட பைபாஸ் ரோட்டில் உள்ள மேல்நிலை தொட்டியில் குடிநீர் விநியோக 25 எச்.பி பம்ப் யூனிட்டில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுது பார்க்கும் பணி செய்ய 07.10.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. கெங்கா எலக்ட்ரிக்ல்ஸ் சாத்தூர் – ரூ. 11,800/–
2. சுபா செல்வி எல்க்ட்ரிக்ல்ஸ் சாத்தூர் – ரூ. 12,570/–

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கெங்கா எல்க்ட்ரிக்ல்ஸ் சாத்தூர் நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 281/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 695, நாள்: 23.10.2020.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது**

பொருள் எண்: 24

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட கழிவுநீர் உந்து நிலையம் யூனிட்–2 உள்ள 10 எச்.பி பம்ப் யூனிட்டில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுது பார்க்கும் பணி செய்ய 07.10.2020–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. கெங்கா எலக்ட்ரிக்ல்ஸ் சாத்தூர் – ரூ. 16,160/–
2. சுபா செல்வி எல்க்ட்ரிக்ல்ஸ் சாத்தூர் – ரூ. 16,600/–

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கெங்கா எல்க்ட்ரிக்ல்ஸ் சாத்தூர் நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 249/2020/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 696, நாள்: 23.10.2020.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது**

பொருள் எண்: 25

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட இருக்கண்குடி நீர் உந்து நிலையத்தில் உள்ள 15 கே.வி.ஏ capacitor பழுது ஏற்பட்டுள்ளது. அதனால் அதனை இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே பழுது பார்க்கும் பணி செய்ய ஆகும் உத்தேசச் செலவுத் தொகை ரூ.9,800/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 428/2020/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 697 நாள்: 23.10.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்: 26

இந்நகர் மன்ற தீர்மான எண் 640 நாள் 05.06.2020ல் நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு தேவையான மின்பொருட்கள் வாங்க உத்தேச செலவு தொகை ரூ.2,00,000/-க்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது உள்ளூர் விலைப்புள்ளி பெறப்பட்டதில் கூடுதல்காக உள்ளது. எனவே திருத்திய உத்தேசச் செலவுத் தொகை ரூ.4,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 253/2020/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 698, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : அங்கீகரிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 27

சாத்தூர் நகராட்சிக்கு சொந்தமான மரியன் ஊரணியில் KFW–திட்டடத்தின் கீழ் மேம்பாட்டு பணிகளை ரூ.140.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாக குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண்.32 நாள்: 05.04.2017–ல் நிர்வாக அனுமதி அளித்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன்படி திட்டப்பணியை மேற்கொள்ள தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் மூலம் அதற்கான மானியம் ரூ.98.00 இலட்சம் (70 சதவீதம்), கடனாக ரூ.28.00 இலட்சமும் (20 சதவீதம்) நகராட்சி பங்கு தொகையான ரூ.14.00 இலட்சமும் (10 சதவீதம்) செலுத்தி பணியினை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.49, நாள்: 02.05.2017–ல் மன்றத்தின் அனுமதி பெற்று ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு பணியினை மேற்கொள்ள 19.02.2018–ல் பணிக்காக உத்திரவு வழங்கப்பட்டு 30.05.2018–ல் மரியன் ஊரணியில் உள்ள நீரினை வெளியேற்றும் (Dewater) பணியினை மேற்கொண்ட போது, அரசியல் கட்சி பிரமுகர்கள், நகர் முக்கிய பிரமுகர்கள் மற்றும் அப்பகுதியில் உள்ள குடியிருப்பு வாசிகள் புகார் அளித்து பணியினை மேற்கொள்ளுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். இந்நிலையில் மீண்டும் பருவமழை தொடங்கியதால் மரியன் ஊரணியில் மழைநீர் தேங்கி முழு கொள்ளளவை எட்டியதால் பணியினை மேற்கொள்ள இயலவில்லை. தற்போது மழைநீர் வற்றிய நிலையில் மே 2020 முதல் பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இத்திட்டத்திற்கு என ஒதுக்கீடு செய்யப்பட்ட மானியம் பெறுவது 11.07.2019 உடன் காலவாதி ஆவதால் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மானியத் தொகையினை பெறுவதற்கு வரும் 31.03.2021 வரை கால நீட்டிப்பு செய்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

திட்டப்பணியினை முடிப்பதற்கும் அதற்கான மானியத் தொகையினை பெறுவதற்கும் 31.03.2021 வரை கால நீட்டிப்பு செய்து மானிய தொகையினை பெறுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1424/2015/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 699, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

**(ஒம்) என்.ராஜமாணிக்கம்,**
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**சாத்தூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**சாத்தூர் நகராட்சி.**